பிறவெளியீடு. விலை 0—1—3. REGD. NO. M. 4642

# திராவிட நாடு

மலர் 3. இதழ் 32.

## இந்தத் திராவிடம்.

[குடந்தை S. கருணாநந்தம்]

இந்தத் திராவிடம் என்னுடை நாடு
  என்று தினந்தோறும் நீயிதைப்பாடு
முந்தித் திராவிடர் முறையுடன் ஆண்டார்
  மூடத்தனத்தால் முழுமோசம் பூண்டார்
வந்துபுகுந்திட்ட மறையோரை நம்பி
  வகையின்றி வாடினதினிப்போதும் தம்பி
சொந்தத் தமிழரின் சுதந்திரம் நீங்க
  சூழ்ச்சிகள் செய்தோரைச் சூறைசெய்ஏங்க.

பழிதரும் பார்ப்பனர் நரித்தனத்தாலே
  பஞ்சைகளாயினும் பாரிதன்மேலே
கழிபெருந் துன்பத்திற்காளானோம் நம்பி
  கண்மூடித்தூங்காதே இன்னமும் தம்பி
இழிதருஞ்சொற்களை இங்கிருந்தோட்டி
  ஏற்பனசெய்உடன் இளைஞரைக் கூட்டி
அழிவிலாத் திராவிடம் ஆன்றோர்கள் சொத்து
  அந்நியர் ஏனிதற்கரும்பஞ்சாயத்து.

# சொல்லாதது.

3-ம் பக்கத் தொடர்ச்சி.

லைத்தான் கலியாணம்செய்துகொள்வது என்று நான் தீர்மானித்துவிட்டேன்"

"மனக்கோட்டை இது, இடிந்துபோகும். இலுப்பப்பட்டி மிராசுதார் மகள் முகம் இஞ்சிதின்ற குரங்குபோல இருக்குதாம்! இருந்தால் என்ன, அவள்தான் உனக்கு நாயகியாக வரப்போகிறவள்"

"சீ! அந்தக் குரங்கையா, நான் கலியாணம் செய்துகொள்வேன்?"

இவை சுந்தரிக்குக் கனகு சொல்லாதவை, கனகுக்குச் சுந்தரியும் சொன்னதல்ல!

சிலகாலத்துக்குப் பிறகு இலுப்பப்பட்டி மிராசுதாருக்குத்தான் கனகு மருகனானான்.

"குரங்குபோல இருக்கிறாயே, உன்னைக்கட்டிக்கொண்டேனே, நான் ஒரு மடையன். அப்பன் மிரட்டினால் என்ன, பிடிவாதமாகஇருந்தால், எப்படி நடந்திருக்கும் இந்தக்கலியாணம்? பாழான பணத்தாசை எனக்கும்பிடித்துக்கொண்டதால்தான், நானும் இதற்கு ஒப்புக்கொண்டேன். பத்தரைமாற்றுத் தங்கம் போன்ற சுந்தரியை இழந்துவிட்டேன். இனி உன்னோடு அழவேண்டும் என்விதி! விதி என்னசெய்யும்? என்புத்தியைக் கட்டையாலே அடிக்கவேணும்" என்று கனகுசொல்லிக்கொள்ளவில்லை, எண்ணவுமில்லை. அவன்தான் என்னசெய்வான் பாவம்! அறுபதுவேலி நிலமும் இலுப்பப்பட்டியாரிடம் அடகுஇருந்தது, தன்னுடைய அழுமூஞ்சியைக் கனகு கழுத்திலே கட்டிவிட்டபிறகுதான், வட்டியும் அசலும் செல்லாகிவிட்டதாக மிராசுதார் எழுதிக்கொடுக்க இசைந்தார். பட்டகடனுக்கு இது தண்டனை என்று கனகு நினைத்துக்கொண்டான். சொல்ல முடியுமோ?

தேசாந்திரம் செய்துகொண்டிருந்த திருவேங்கடம், "எனக்கு மனைவிஉண்டு, ஒரு மகளும்உண்டு, சிகப்பாக இலட்சணமாகஇருப்பாள். என்மனைவிஎப்படியோ கஷ்டப்பட்டு, ஏதேதோபாடுபட்டு, என் மகளை வளர்த்துவருகிறாள். எனக்கு வேலைசெய்யமுடிவதில்லை, வீட்டைக் கவனிக்கமுடியவில்லை, இப்படி ஊரூராக அலைந்து, அரைவயிற்றுக் கஞ்சிக்கு ஆலாய்ப்பறக்க முடிகிறதேயொழிய வீட்டோடுஇருக்கப் பிடிக்கவில்லை. நான் கட்டியிருப்பது காவிதான், ஆனால் கள்ளச்சாவிகிடைத்தால்போதும், போதைக்குச்சரியான "சான்சு" கிடைத்துவிடும். அது ஒன்றுதான்வாழ்க்கையிலே எனக்கு இருக்கும் திருப்தி" என்று, திருவேங்கடம் சொல்லவில்லை, ஆனால் அவன் எண்ணம் அதுதான். சுந்தரியின் பருவநிலையைப்பற்றியோ, வீட்டின் வறுமையைப் பற்றியோ, கனகுவின் காதல் விஷயமாகவோ, அந்தக் காதலை அவள்வீட்டு நிர்ப்பந்தத்தினால் கைவிடவேண்டிநேரிட்டதுபற்றியோ, ஊரூராகச் சுற்றிக்கொண்டு, ஓய்வுக்கு மடங்களிலேதங்கி, தேர்திருவிழாக்காலங்களிலே, திருப்தியாகவாழ்ந்துவந்த திருவேங்கடத்துக்கு யாரும்சொல்லவில்லை.

கனகுவின் மனைவியானாளே இலுப்பப்பட்டியார் மகள், காவேரி, அவளுக்குக் கனகுவோ, வேறுயாரோ, சொல்லவில்லை, ஆப்பக்கடைக்காரியின்மகளிடம், கனகு காதல்கொண்டிருந்த கதையை, எப்படி அவ்வளவு பணக்காரப் பெண்ணிடம் அதைப்பேசுவது என்ற பயத்தால்.

இவ்வளவுதானா, கனகுவின் இஷ்டப்படி சுந்தரி சில வேளைகளிலே நடந்துகொண்ட விஷயத்தையாரும் தனபாக்கியத்துக்குச் சொல்லவேயில்லை.

இது ஏன் இந்தப்பெண் இவனோடு இப்படிக் குலாவுகிறாள், என்று தனபாக்கியம் பல சமயங்களிலே எண்ணினதுண்டு, சொன்னதில்லை. அடி, அம்மா, ஜாக்ரதை. அவன் அப்படி இப்படிஎன்று ஏதாகிலும் கெட்டபேச்சுச் சொன்னால் கேட்காதே. அம்மாவிடம்சொல்லி விடுவேன் என்று மிரட்டிவை" என்றும் சுந்தரிக்கு அவள் தாயார் சொல்லவில்லை. கனகு கெட்டபேச்சுப் பேசியிருந்தால் தானே, சுந்தரி, அம்மாவிடம் தானாகவாவது சொல்லியிருப்பாள். அவன் சொன்னதுதான் அவளுக்கு ஆனந்தமாக இருந்ததே கேட்க.

"அம்மா,வாயைக்குமட்டுகிறது, சாதம் பிடிக்கவில்லை, மயக்கமாகஇருக்கிறது, என்னமோபோலஇருக்கிறது உடம்பு" என்று சுந்தரி சொல்லாமலேயே, தனபாக்கியம் நிலைமையைக்கண்டுகொண்டாள், "ஐயயோ, மோசம் வந்துவிட்டதே. அந்தப்பயல் அநியாயமாக எதுமறியா என்மகளைக் கெடுத்துவிட்டான் போலிருக்கிறதே. நான் என்னசெய்வேன். ஏழை என்பதற்காகவே இவளை நல்லஇடத்திலேயாரும் கேட்கவில்லை.இப்படியும் நேரிட்டுவிட்டால் என்கதி என்னாவது. அடிபாழும் பெண்ணே, இப்படி என்அடிவயிற்றிலே நெருப்பைக் கொட்டினாயே, அவ்வளவுதிமிராஉனக்கு, ஆணவமா? கொழுத்துப்போனாயா?என்றெல்லாம்சொல்லித் தனபாக்கியம்சுந்தரியைக்கண்டிக்கவில்லை, விஷயம் வெளிவந்துவிட்டால் விபரீதமாகிவிடுமேஎன்ற பயத்தால். ஆனால் தனபாக்கியத்தின் பெருமூச்சும், தானாகவழிந்த கண்ணீரும் சுந்தரிக்கு இதைவிட விளக்கமாகத் தாயின் மனோவேதனையைத் தெரிவித்தது.

"தம்பி, ஊரில் உனக்கு உத்தமன் என்று பெயர் இருக்கிறது. நல்லவனென்று புகழாதவர்கள் இல்லை. ஏழைகளிடம் இரக்கம்காட்டுகிறாய். இலுப்பப்பட்டி மிராசுதாரின் இறுமாப்பினால் கஷ்டமடைந்தவர்களையெல்லாம் உன் கருணையால் காப்பாற்றுகிறாய். இவ்வளவு நல்லவனான உன்னால் என்குடும்பமே பாழாகிவிட்டதே. அதோ சுந்தரிபடும் வேதனையைப் பாரடா அப்பா. எந்தப் பாவிகொடுத்தமருந்தும் அதைக்கரைக்கவில்லையே. வளருகிறதே உன்னால் ஏற்பட்ட வம்பு. ஊரார் தூற்றுகிறார்களே. சுந்தரியின் கண்ணீர் என்னைச் சித்திரவதைக்கு ஆளாக்குகிறதே. ஏதோபணத்துக்கு ஆசைப்பட்டுக்கொண்டோ, அப்பனுக்குப் பயந்தோ ஒருவளைக்கலியாணம் செய்துகொண்டாய். உன்அன்புமொழியை நம்பினாளே இந்த அபலை, இவளையும் ஏற்றுக்கொள்ளக்கூடாதா இரண்டாந்தாரமாக, இழிவுபோகுமே," என்று தனபாக்யம் கனகனிடம் கூறவில்லை. கூறிப்பார்ப்போம் என்று பலதடவை எண்ணுவாள், எப்படிக்கூறுவது, சொல்லிப் பயன்என்ன, என்று எண்ணிஏங்குவாள்.

"அம்மா, கன்னி கருவுற்றாள். ஊர் தூற்றும் என்று பயந்து ஓடிவந்துவிட்டோம். நீ காப்பாற்று," என்றுசொல்ல மனம் இடந்தரவில்லை தனபாக்யத்துக்கு. ஊரைவிட்டுத்தொலைந்தால்போதும், என்று சுந்தரியை அழைத்துக்கொண்டு வேறு ஊர்வந்து குடிஏறினாள். சுந்தரிக்குப் பத்தாம்மாதம்! மருத்துவம் பார்க்க வந்த கிழவியிடம், தனபாக்யம், அபாக்யவதி சுந்தரியின் அந்தரங்கக்கதையைக் கூறவில்லை. "அவளுடைய புருஷன் அக்கரைக்கு ஓடிவிட்டான்" என்று பொய்யுரைத்தாள். தாலிஇருந்தது சுந்தரியின் கழுத்திலே, தாய் மகளுக்குக்கட்டிய தாலி!!

தங்கவிக்ரஹம்போன்ற குழந்தை பிறந்தது சுந்தரிக்கு. பேரன் பிறந்ததுதெரியாமல் பெருமாள் கோயிலிலே பலமான பூஜைநடத்திக்கொண்டிருந்தார் லோகுமுதலி.

கலியாணமோ இல்லை! குழந்தையோ தவழ்ந்தது அந்தக்குடிசையிலே. மாளிகையிலே, கனகனும் காவேரியும், கனபாடிகளின் பூஜை, காளிஉபவாசியின் தாயத்து, சித்தவைத்தியரின் செந்தூரம் ஆகியவற்றை நம்பிக்கிடந்தனர், பலனின்றி.

"என்மகன் ராஜாபோல இருக்கிறான், எனக்கென்னகவலை" என்று கனகுயாரிடம் கூறுவான், எப்படிக்கூறுவான், விஷயமேஅவனுக்குத்தெரியாது, தெரிந்தாலும் கூறமுடியுமா!

(5ம் பக்கம் பார்க்க)

# சொல்லாதது.

3-ம் பக்கத் தொடர்ச்சி.

போனவன் திரும்பவில்லையே! என்று பலர், ஆயாசமும் ஆச்சரியம்கொண்டு, சுந்தரியைக்கேட்டனர். அக்கறை இல்லை அவருக்கு, ஆகவே அவர் அக்கரையில் இருக்கிறார் என்று சாக்குக் கூறுவது தவிரவேறு வழியில்லை விழியிலே நீர் வழியவழிய வதைபட்டுக்கிடந்த அந்த வனிதைக்கு. காலம், அவளுடைய கவலையைப்பற்றிய கவலையால் ஓய்ந்து விடுமா, அது ஓடிக்கொண்டேயிருந்தது. ஓராண்டு, ஈராண்டு, மூவாண்டு, ஐந்து ஆண்டுகள் கழிந்தன, தாலியுடன் மணமாகாத மங்கை உலவிக்கொண்டிருந்தாள், தகப்பனாரைக்காணாது தத்தி நடக்கும் பருவமடைந்தான் தங்கராஜன்—தாய்தங்கமே என்றுகொஞ்ச, பாட்டி ராஜா என்றுகொஞ்ச, இரண்டு ஆசைமொழிகளும்திரண்டு, குழந்தைக்குத்தங்கராஜன் என்று பெயராக ஏற்பட்டது. தங்கராஜனின் தகப்பனாரின், "ராஜ்யம்" "தங்கம்" இரண்டுக்கும் தேய்வு ஏற்பட்டுக்கொண்டே இருந்தது இந்த ஐந்து வருஷங்களிலே! இலுப்பப்பட்டி மிராசுதாரருக்கு ஒரு வியாஜ்யம். அது முனிசீப்புக் கோர்ட்டிலிருந்து ஹைகோர்ட் சென்றது, இந்தப்பிரயாணச் செலவு மிராசுதாரரின் தங்கநகைகளை மார்வாடிக்கும், நிலத்தில் முக்கிய பகுதிகளை, வேறோர் ஜெமீனுக்கும் கட்டணமாக்கிவிட்டது.

"எந்தவேளையிலே நீ எனக்கு மருமகனாக வந்தாயோ, அன்றே என்னைச் சனி பிடித்துக்கொண்டது, என் முகத்திலே விழிக்காதே, உன்னைக் கண்டாலே எனக்குக்கடுங்கோபம் பிறக்கிறது"

"உனக்கு இவ்வளவோடா நின்றுவிடும், கேடு. நீ படவேண்டியது எவ்வளவோ இருக்கிறது. உன்னுடைய பணத்திமிரினால், எவ்வளவு ஏழைகளை கண் கலங்கச் செய்திருக்கிறாய், அதனுடைய பலனை அடைகிறாய், என்மீது கோபித்துக்கொள்கிறாயே, உன் அட்டகாசத்தால் ஊரிலே உனக்குப்பகை. வியாஜ்யம் பிறந்ததும் உன் விரோதிகள் உன்னைத் தீர்த்துக்கட்ட வேலை செய்கிறார்கள். படு, எனக்கென்ன! நான்என்ன செய்வது? உன்னாலே நான் கெட்டேன். என்னாலே அந்தப்பெண் கெட்டுச் சீரழிந்து, எங்கோ போய்விட்டாள். உன் முகத்தைப் பார்க்கும்போதே எனக்கு வருகிற கோபம் கோடாரியையோ அரிவாளையோ தேடச் சொல்கிறது."

மாமனாரும் மருமகனும் சொல்லிக்கொள்ளவில்லையேயொழிய, ஒருவரைஒருவர் பார்த்துக்கொள்ளும்போதெல்லாம், கண்கள் இக்கருத்துகளையே காட்டின.

கேஸ் தோற்றுவிட்டது, கஷ்டம் முற்றிவிட்டது. இலுப்பப்பட்டி கைமாறிவிட்டது போலத்தான்—என்று மிராசுதாரர் சொல்லவில்லை, அவருடைய வயிற்றுவலி, வாந்தி, காய்ச்சல், இவைகள் வேறு என்ன கூறின!!

சீமானின் மருமகனாகிச் சிங்காரமாக வாழ நினைத்த கனகு, சீரழிந்த மிராசுக் குடும்பத்தைக் காப்பாற்றித் தீரவேண்டிய பொறுப்பைத்தான் பெற்றான், குளிக்கப்போனவன்சேறுபூசிக்கொண்ட கதைபோல.

தேசாந்திரி திருவேங்கடத்துக்குத்தன் குடும்பத்தின் நிலைமையையாரும் கூறவில்லை, யாருக்கு என்ன அக்கறை! அவன் ஒருநாள் அன்போடு, உபசரித்தான் ஒரு ஆண்டியை! அந்த ஆண்டி மாறுவேடத்திலே வந்திருந்த இலட்சாதிகாரி என்பதைத்திருவேங்கடத்துக்கு யாரும் சொல்லவில்லை. தனக்குக்கிடைத்த சோறு வேறொருவனின் பசியைத்தீர்க்க உதவட்டும் என்றபெரிய தத்துவத்தையும் அவன் யாரிடமும் பாடங்கேட்டவனல்ல. அன்று அவனுக்குப்போதை! சோறு இருந்தது நிரம்ப, பசி இல்லை, பாதையிலே சுருண்டுகிடந்தான் ஒரு பரதேசி; தூக்கிஎடுத்து வைத்துக்கொண்டு உபசரித்தான் திருவேங்கடம்.

பரதேசிக்கோலத்திலே பலஊர்சுற்றித் தர்மவான்களின் தப்பிலித்தனம், புண்யவான்கள் செய்யும் பாபச்செயல்கள், முதலியலோக விசித்திரத்தைக்கண்டு அனுபவ அறிவு பெற்றுவந்த அருமைநாயகம்பிள்ளை, பல இலட்சத்தைப் பாங்கியில் வைத்திருந்தார், குடும்பம் கிடையாது, ஒரு ஆண்டிக்கு ஈரமுள்ள நெஞ்சு இருந்தது கண்ட அருமை நாயகம், அந்த ஆண்டிக்கே தன் சொத்து முழுவதையும் தந்துவிடுவது என்று தீர்மானித்துவிட்டான். அதைச் சொன்னால் அவன் நம்ப மாட்டான் என்பதற்காகத் தன் எண்ணத்தைச் சொல்லவில்லை, தன்னுடன் வரும்படி கூறினான், வீடு நமக்கு நாடு முழுதுமே, ஓடு உண்டுகையில்; என்ற விருத்தத்தைப்பாடியபடி சம்மதித்தான் திருவேங்கடம். இருவரும், பலஊர் அலைந்துவிட்டு அருமை நாயகத்தின்ஊராகிய ஆற்றூர் வந்து சேர்ந்தனர். அந்த வேற்றூரிலே, தன் குடும்பம்இருப்பதைத் திருவேங்கடத்துக்கு யாரும் சொல்லவில்லை—யாருக்குத்தெரியும்? ஆற்றூரிலே அங்கும் இங்கும் சுற்றிக்கொண்டிருக்கையிலே, தனபாக்கியத்தைத் திருவேங்கடம் கண்டான், ஆச்சரியமடைந்தான். குடிசை சென்றான், சுந்தரியைக் கண்டான், தங்கராஜனைக் கண்டான், தகதகவென ஆடினான் சந்தோஷத்தால். மெள்ள மெள்ள விஷயத்தைத்திருவேங்கடம் தெரிந்து கொண்டான், அவன் மனம் துடித்தது.

"எங்கேஇருக்கிறான் அந்தப் பாவி? அவன் கழுத்தை முறிக்கிறேன்."

"வேண்டாம். அவன் பெரிய பணக்காரன். உலகம் அவன்பக்கம்பேசும்"

"துறவிக்கு வேந்தன்துரும்பு, தெரியுமா? அவன் மனிதனாடி, இந்தச் சொர்ணவிக்ரகத்தை அவன் கண்டானா? அவன் பணக்காரனானால் எனக்கென்ன பயமா? சீ! நான் எத்தனையோ பணக்காரன் பரதேசிப்பயலாகிவிட்டதைப் பார்த்திருக்கிறேன். இதோ இந்தஊரிலே இருக்கிறாரே அருமைநாயகம், இந்த ஆசாமி ஆண்டியாகஇருந்தது எனக்குத் தெரியும். பணமாம் பணம். அது என்னடிசெய்யும்"

திருவேங்கடம் தன்மனைவியிடம் இது போலச் சொல்லிக்கொண்டுஇல்லை, மனதிலே எண்ணினான் பல, சொல்லவாய் வரவில்லை.

திருவேங்கடத்தின் குடும்பத்தின் நிலைமையைத் தெரிந்துகொண்டார் அருமைநாயகம். நிர்க்கதியாகி, நிந்தனைக்குட்பட்டுக்கிடந்த ஒரு குடும்பத்தைக் காப்பாற்றும் சக்தி தனக்கு இருந்ததற்காகச் சந்தோஷமடைந்தார். குடிசைகாலியாகிவிட்டது. தங்கராஜன், பெரியதாத்தா மடியில் கொஞ்சநேரமும், சின்னத் தாத்தாதோளில் கொஞ்சநேரமும் இருப்பான், கூத்தாடுவான் கூவுவான், கண்டு களிப்பாள் சுந்தரி, மறுகணம், அவள் கண்களிலே நீர் பெருகும். ஏழ்மையிலே மூழ்கியிருந்த சமயத்திலாவது, சதா ஜீவனத்துக்கு வேலைசெய்துகொண்டிருக்க வேண்டியிருந்ததால், விசாரப்படநேரம் கிடைப்பதில்லை. அருமை நாயகத்தின் ஆதரவால் ஜீவனக்கஷ்டம் இல்லாமற் போகவே, சுந்தரிக்கு விசாரம்விடாத நோயாகிவிட்டது.

இலுப்பப்பட்டியார் இறந்தார், கனகனின் தகப்பனார் அவரைத்தொடர்ந்தார், காவேரி காசநோய்க்குப் பலியானாள், கனகன் கப்பலேறினான், பர்மாவுக்குக் கடைக்கணக்கப் பிள்ளையாக! அக்கரையிலேஇருக்கிறான் சுந்தரியின் கணவன் என்று சொல்லிவந்த பொய்யே மெய்யாகிவிட்டது!!

தங்கராஜனுக்கு வயது பத்தாகிவிட்டது. அவனுக்குச்சொல்லவில்லை, தாயாரின் துயரத்தை. தகப்பன் அக்கரையிலே ஏன் இருக்கிறார்? எவ்வளவு காலத்துக்கு இருப்பார்? என்று அவன் கேட்கவுமில்லை. என்ன காரணத்தாலோ, மனைவியிடம் சண்டையிட்டுவிட்டு, அவர்போய்விட்டார் என்று நம்பியிருந்தான்.

(8-ம் பக்கம் பார்க்க)

# திராவிட நாடு.

காஞ்சி 22—10—44 ஞாயிறு

## புரட்சியும் மருட்சியும்.

"மன்னரே! மக்கள் மனம் குமுறிக் கிடக்கின்றனர். தீப்பொறி பறக்கும்கண்களுடன் காணப்படுகின்றனர். அவர்களால் எந்தச் சமயத்திலே என்னகேடு நேரிடுமோ என்று அஞ்சவேண்டி இருக்கிறது. ஆத்திரம் மிகுந்த மக்கள் அடக்க முடியாத புயலன்றோ,"

"வீண் மிரட்சி கொண்டுவிட்டார் முதியவர், மக்களின் கோபமாம், அது கண்டு இவருக்கு அச்சமாம், நெஞ்சிலே உரமில்லாத பஞ்சைகள், என்ன செய்வர், என்னசெய்ய முடியும்?"

"புயலின் முழுவேகமும் தோன்று முன்னம், விவேகிகள், வாடையைக் கண்டே தெரிந்து கொள்வர்"

"நிலை கெட்டவர்கள் அஞ்சி அஞ்சிச் சாவர்,"

"எரிமலைமீது அரிதுயில்புரிவது அறிவுடைமையா அரசே,"

ஆணவம் பிடித்த அரசனுக்கு அறிவுள்ள அமைச்சன், கொடுமை தாங்க மாட்டாமல் கொதித்துக்கிடக்கும் மக்கள் மனதிலே கொந்தளிப்புஇருப்பதைக் கூறி, முறையை மாற்றி நடந்து கொள்ளும்படி கூறும்போது, செவியிலே வீழ்வதில்லை.

ஆடலழகியின் இடை அசைவிலே, இசைவாணனின் நாவசைவிலே, இன்பவல்லியின் விழி அசைவிலே, இசைந்து கிடப்பான், இறுமாப்பின் மிகுதியால், ஆபத்துத்தலைவாயிலைக் கடந்துவந்து நிற்கும் வரையிலே, உணர்ந்துகொள்ளமாட்டான். ஊராளும் உரிமை இருக்கும் போது, நமக்கென்ன குறை என்றுகருதி வாழும் காவலன். பிறகு எங்கோ ஓர் பேரரவம் கேட்கும், உடனே இவன் மருட்சியடைவான், பிறகோ பட்டத்தரசியின் பக்கலில் படுத்துறங்கவும் அஞ்சுவான், பாலில் விஷமுண்டோ, பாவையரின் பக்கம் சேரின் பகைவனின் கத்தி நிற்குமோ, என்று மிரளுவான். வீணையின் நாதமும் அவன் செவிக்கு, வீரரின் ஆயுத ஒலிபோலிருக்கும். கிண் கிணி ஓசையும் கிலியே தரும். நிழலைக்கண்டு அஞ்சுவான் நில்லான் ஓரிடத்தில், வகையுள்ள வார்த்தை ஏதும் சொல்லான், மருட்சி, மருட்சி அவனைச்சித்திரவதை செய்யும். புரட்சி அச்சமயம் ஓர்புறத்திலிருந்து கொண்டு புன்முறுவல்புரியும். ஆணவம் கடைசி வரையிலே இராது, களம்புகவைக்கும், அங்கு சென்றதும் ஆணவம் அச்சத்திடம் அவனை ஒப்புவித்துவிடும். பித்தம் அவன் பக்கம் வந்துசேரும்,

கொடுங்கோல் மன்னர் மட்டுமல்ல, [illegible] யேதான் வந்துதீரும். தனி மனிதர்களுக்குமட்டுமல்ல இந்த "விதி," வகுப்புகள், இனங்கள் ஆகியவைகளுக்கும் இதுதான் கதி. ஆம்! வரலாற்றினை நன்கு அறிந்தோர் இதனை அறிவர்.

கொடுங்கோலும், வெஞ்சிறைக்கோட்டத்துத் திறவுகோலும், தலைகளும்தூக்கு மேடைகளும், புரட்சிப்புயலின் முன்பு வெறும் கூளங்களாயின! இதுவரலாறு! நாம் அறிவோம் நாட்டிலே பலர் அறிவர் இதனை. ஆனல் திருவாங்கூரிலே திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் திருப்பிரம்மச்சொரூபர், திருமயிலைச் சீலர், பிரம்மஞானச்சீடர், பெசண்ட் அம்மையின் "ஞானப்பால்" உண்ட சம்பந்தர், சச்சிவோத்தமர், சர். சி. பி. இராமசாமி ஐயர், இந்த வரலாறு அறிந்தவர்தானு என்பதை அறிந்துகொள்ள நாம் ஆவலாகஉள்ளோம். வரலாறு அறியாதவகையற்றவர்பேசும் வரட்டுவாதத்திலே, அவர் தமது வாய்மொழியை அமைத்திருப்பதுகண்டே, நமக்கு இச்சந்தேகம் தோன்றியிருக்கிறது. அரசோச்சும் அண்ணலுக்கு அமைச்சராக அமர்ந்துள்ள அவருக்கு, அனேகம் தொல்லைகள் உண்டு என்பதைநாமறிவோம். நள்ளிரவிலேயுங்கூட, சர். சி. பி. இராமசாமி ஐயர் அவர்களுக்கு, நாடாளும் மன்னனுக்கு நல்லதெது என்பதைக்கண்டறிந்து காரியம் செய்யவேண்டியபொறுப்புமிருந்துஇருக்கும்என்பதும் நாமறிந்ததே. வேலைமிகுதியால் வரலாறுகாண அவரால் முடியவில்லைஎன்று கருதியேதான் நாம் சற்று விரிவாகவேகூறினேம், புரட்சியின்தன்மைபற்றி.

அவர்தமது இனத்தின் முன்னுள் வேலையை முறையாகச்செய்துகொண்டு, கபாலீச்சுவரருக்குக் கற்பூரார்த்திகாட்டிக்கொண்டிருக்கும்கனபாடியாகஇல்லை. கடல்கடந்து, காட்சிபலகண்டு, பதவிபல பெற்றுப்பக்குவமுற்றுப், பாராளும் வேந்தருக்குப் பண்புரைக்கும் பணியிலமர்ந்தன்றோ இருக்கிறார். பிரம்மஸ்ரீ மட்டுமல்லவே, சர். சி. பி. அல்லவா? திதிக்கும் திருமணத்திற்கும் நாள்குறித்துத்தந்து காய், கறியும் காசும்பெறும் திருப்பிரம்மம் அல்லவே, திவான்ஜீ அல்லவா அவர், அப்படிப்பட்டவருக்கு எப்படி வரலாறு மறந்துவிட்டது என்று நாம் ஆச்சரியப்படுகிறோம். அவர் தமது சொந்தவரலாற்றினைவேண்டுமானல் மறந்துவிடலாம், மறவாதிருப்பின் மனச்சாந்தி இராது, சென்னை அரசியல் விஷயங்களிலே அவர் சிக்கியபோது சற்றுச் சிரமப்பட்டிருக்கிறார்! ஆனல் பல்வேறு நாடுகளின் வரலாறுகளை அவர் மறக்கலாகுமா? பெருந்தவறு! ஆம்! அவ்வளவு பெரியவர் செய்யக்கூடாததவறு. ஆகவேதான், புரட்சி வருமுன் புல்லர்கள் இறுமாந்துகிடப்பர், புரட்சிவந்துவிட்டாலோ மருட்சிகொள்வர், புரட்சியோ தன்எதிர்தோன்றும் எந்தத்தடையையும் தகர்த்தெறிந்துவிடும், ரஷிய, பிரன்சுப் புரட்சிகள் இதனைஎவ [illegible] வரலாறுதரும், ஆகவே அந்த வரலாற்றினைமட்டும் மறக்கலாகாது என்றயோசனையை நாம் சர். சி. பி. அவர்கட்குச் சமர்ப்பிக்கிறோம்.

திவான்ஜீக்கு, இந்த விஷயத்திலே தெளிவு இல்லாததால்தான், திருவாங்கூர் விஷயத்தைக் கவனித்துக்கொண்டு இருப்பதோடு நில்லாது, டாக்டர் அம்பேத்காரிடம் மோதிக்கொள்ளமுனைந்தார். அம்பேத்காரின் அறிவுரை, ஆண்மையுரை, ஆரியபுரியிலே அச்சத்தைத்தந்ததுதத்தோமென்றுடித்தகாதனபலகூறி ஆரியஏடு எழுதிகள் ஏங்கினர், அவர்களுக்கு அபயம் அளிக்க இவர் ஏன்முன் வரவேண்டும்? வீரத்தைக்காட்டிக்கொள்ளவா? விவேகத்தை விற்பனைசெய்யவா? வேதியகுலத்தலைவன் என்ற விருது பெறவா? காரணம்என்ன இவருக்கு இத்தனை கவலைபிறக்க! எக்காரணம் கொண்டோ வந்தார் என்றே கொள்வோம், வந்தவர் என்ன வகையுள்ளபேச்சா சொன்னார்?

வேதத்தை இகழ்ந்தாரேஅம்பேத்கார், இந்துமதத்தைப்பழித்தாரே! பார்ப்பனியத்தைக் கண்டித்தாரே! தகுமா, முறையா? நீங்கள் கேட்டுக்கொண்டு சும்மா இருக்கலாமா? ஆஹா! உஹூ! ஐயோ! என்று அலறினரே யொழிய, அம்பேத்கார் கூறியவற்றிலே இதுதவறு என்று அறிவுக்குப் பொருத்தமான வாதங்காட்டினரா? இல்லை! அதைத்தான் கேட்கிறார் அன்பர் S. இராமநாதன், இக்கிழமைலிபரேடர் இதழிலேஅவர் தீட்டியுள்ளஒருஅரியகட்டுரைமூலம்! சர். சி. பியின் பேச்சனத் தவிடு பொடியாக்குகிறார் முன்னுள் அமைச்சர். இறுதியாக ஒரு எச்சரிக்கையும் விடுத்திருக்கிறார், "ஐயா! மக்கள் கண்மூடி மௌனியாகிக் கிடந்தனரே அந்தக்காலம் மலை ஏறிப்போச்சு, இது புரட்சிக்காலம். உண்மையான சமுகப்புரட்சியை நடத்த ஏற்றகாலம், இந்தச் சமயத்திலே செல்லாது ஆரிய ஜாலம். ஆரியம் அனுவசியமாகக், குறுக்கிட்டு இப்புரட்சியைத் தடுத்தால் இரத்த வெள்ளம் உண்டாகும், அதை நீந்திக்கடந்தேனும் விடுதலை பெறுவது என்ற வீர உறுதியிலே மக்கள் உள்ளனர்." என்பது இராமநாதன் அவர்களின் அறிவுரை. அது திராவிடமக்களின் இருதய முத்திரைபொறிக்கப்பட்டு, ஆரியபுரிக்கு இறுதி எச்சரிக்கையாக, அனுப்பப்படவேண்டிய, விடுதலைப்போர்துவக்க அறிவிப்பு ஓலை என்போம்.

அம்பேத்கார்மீது குற்றம் சுமத்திய திவானுக்கு, அன்பர் இராமநாதன்அறிவு புகட்ட முன் வந்திருப்பது திராவிடப் பண்பு, அறிவுரைக்கு அடங்கமறுப்பது ஆரியத்தன்மை. அறிவுரை பயனற்ற பிறகு? சொல்வானேன், எம்முறை ஏற்றது என்று தீர்மானிக்கும் பொறுப்பை நம்போன்றார் இழந்துவிடுகிறோம், புரட்சியின் கோபம், என்னகூறுமோயார்அறிவர்.

இராமநாதன் அவர்களின் கட்டுரையிலே, பார்ப்பனியம் படம்பிடிக்கப்பட்டிருக்கிறது, அதனை இதோ வெளியிடுகிறோம், பார்க்கட்டும் திவான், கூறட்டும் இந்தப்படப்பிடிப்பு தவறு என்பதை. "பார்ப்பனியம் என்ற முறையிலே அடிப்படையான தத்துவம், பிராமணா மமதேவதா, அதாவது பார்ப்பனர் பூதேவர்கள் என்பதாகும். பார்ப்பனருக்குப் பிறப்பிலேயே உயர்வு உண்டாகி விடுகிறது. பிறர், எவ்வளவு பாண்டித்யம் பெற்றுப் பண்புற்ற போதிலும் பார்ப்பனராக முடியாது. பார்ப்பனன் உயர் ஜாதி, மற்ற ஜாதிகள் அந்தப் பார்ப்பன குலத்துக்குப் பணிவிடை புரியவே பரமனால் படைக்கப்பட்டவர்கள். இந்தத்தர்மத்தை மறுப்பவர் நீசர், அவர்கள் சேரிகளிலே வறுமையிலே, சேற்றிலே, நொந்துக் கிடக்கவேண்டும்."

பார்ப்பனியம் இதுதானே, இல்லை என்று கூற முன்வரும் வீரன் உண்டா? இப்படி ஒரு வகுப்பு பிறவியிலேயே உயர் ஜாதியாகி மற்றவகுப்பினரை அடக்கிஒடுக்கி அடிமை கொள்வதுதான் சரியான முறை என்று கூற முன்வரும் அறிவாளிகள் யார்? இப்படித்தான் நடந்தாக வேண்டும் என்று கூறும் இறுமாப்பினைக்கொண்ட நெஞ்சினர் உள்ளவரையிலே, வெல்லமல்ல உயிர், என்றுகூறி வீறுகொண்டு எழுந்து அறப்போர் தொடுக்கும் ஆண்மையாளர்கள் ஆயிரமாயிரம் உண்டு என்பதைக் காட்டாதவன், மனிதனா, தமிழனா? பறந்துவரும் வல்லூறையும் பாய்ந்து சென்றுதாக்க முனையுமாம் கோழி, தன் குஞ்சுகளின்நலனைக்கோரி. மானத்தைப்பழிக்க, இனத்தை அழிக்க, நீதியைச்சாய்க்க ஒரு சிறுகூட்டம் முனைகின்றதென்றால், நெடுஞ்சுவர்போல், ஓங்கிவளர் மரம்போலவா, இருப்பர் தமிழர், அவர்கள் மனதிலே உணர்ச்சி கிடையாதா? நரம்புகள் முறுக்கை இழந்தே போயினவா? என்றெல்லாம் கேட்கலாம் என்று யாருக்குதான் தோன்றாது. அதனால் நாம் வீணாகவார்த்தைகளை வீசுவானேன் என்றே வாளாஇருக்கிறோம், நாம் அறிவோம், புரட்சிவாடை வீசுவதை, மாளிகையிலே உள்ள மயிலையார் அதனை அறியார், அறியாததாலேயே அவர்ஆர்ப்பரித்திருக்கிறார். ஒரு திவானுக்கு இவ்வளவு "திமிர்வாதம்" இருக்கலாமா என்று நாம் விசாரிக்க வில்லை, இன எழுச்சிமிக்க இக்காலத்திலே இறுமாந்து கிடக்கிறாரே இந்த ஆரியர் என்று கோபங்கொள்ளவுமில்லை. மாறாக, மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம்! ஆம்! திவானுக்கு நன்றியும் கூறுகிறோம்! நன்றி கூறுவது மட்டுமல்ல, நாளையும் இதுபோலவே பேசுங்கள், வேலும் மேலும் பேசுங்கள், தொடர்ந்து தொடர்ந்து பேசுங்கள், கூடிக் கூடிப்பேசுங்கள், என்று கேட்டுக் கொள்கிறோம்! ஏன் என்று கேட்பீர்! ஒரு சி. பி. யின் ஓர்நாள் உரை, எந்த இராமநாதனை இரவல் பெற்றுவிட்டோம் இனி அவர் நமது பொருள் என்று ஆரியம் எண்ணிக்கொண்டிருந்ததோ, அந்த எண்ணத்திலே மண் விழச்செய்து விட்டதல்லவா? கனல் தீச்சுழலாகி விட்டதல்லவா? இதுபோல இனியும் பல தீச்சுழல்கள் திருநடனம் புரியக்காண்போம், ஆரியர்கள் தமது அகத்திலுள்ளதைமறைவின்றி மன்றேறிக்கூறிவிட்டால்.

"ஒற்றுமை ஒற்றுமை என்று ஓலமிடுவர், தேசியம் பேசுவர், ஆனால் ஒற்றுமை குலைக்கும் பார்ப்பனியத்தை ஒரு சொல் கண்டித்துக்கூறார், இத்தகைய தேசீயவாதிகள், மக்களை ஏய்த்துக்கொண்டிருக்கின்றனர்" என்று இராமநாதன் எழுதியிருக்கிறார். கதராடையுடன்உலவிக்கொண்டு, கைராட்டையை நம்பிக்கொண்டுள்ள, எவ்வளவு திராவிடர்கள் இல்லங்களின் கதவுகளை இவ்வாசகம் தட்டுகிறது, "கதவுதிறமினோ! களம் காண்மினோ, இனத்தைக்காக்க எழுமினோ," என்று. எவ்வளவு உள்ளங்களிலே, இவ்வாசகம் பதிந்திருக்கும். தேவர்கள் துயிலிலே அமைதிஇருந்திருக்குமா? நாடிமுத்துக்களின் கள்ளிரவு நினைப்பு என்னவிதமாக இருந்திருக்கும்!

"உண்மைதானே! அவர்கூறியது முற்றிலும் உண்மைதானே!" என்று அவர்களிலே பலர் வாய்விட்டுக்கூறியுமிருப்பரன்றோ. ஆம்! இன்னமும் மயங்கிக்கிடக்கும் தமிழரை, நமது அணிவகுப்புக்குக் கொண்டுவந்துசேர்க்க, ஆரிய ஆணவமே நமக்கு உதவியாகஇருக்கும். ஆகவேதான் சர். சி. பி.யை நாம், மேலும் சில பல பேசுங்கள், மேற்குலப்பெருமையைப் பற்றி வானளாவவாய் வீசுங்கள், தர்மை மறந்து, ஆரியரை அடுத்துவாழும் தமிழரும், உண்மை அறிந்துகொள்ளட்டும், என்று கூறுகிறோம். பசுத்தோல் கீழேவீழ்ந்து விட்டால்தானே தடிகொண்டு தாக்குவர் புலியை. ஆகவேதான், ஆரியரின் ஆணவ உரைகள் நமக்குச் சிலசமயம் மகிழ்ச்சியைத்தருகின்றன.

"பகுத்தறிவாளன் படாதபாடு பட்டிருக்கிறான் இந்நாட்டிலே, சமணர்களைச் சித்திரவதைபுரிந்தனர், கழுவேற்றினர். சகலரும் சமம் என்ற சித்தாந்தத்தைக் கடைப்பிடிக்கத் தொடங்கிய இராமநுஜரை வைதிகம் பணியவைத்துவிட்டது. நந்தனைத் தீயிலேதள்ளிச் சாகடித்து, ஜோதியிலே கலந்தான் என்று புரட்டுரைபுகன்றது." என்று இராமநாதன், பகுத்தறிவாளர்களை வைதிகம் வாட்டிவதைத்தவிதத்தை உரைத்திருக்கிறார், இவ்வளவு இன்னல்உண்டாஎன்று பயங்கொண்டுவிடுவாரோ தமிழர் என்ற பயம் ஒருதுளியும்இன்றி, ஏன்! அவர் அறிவார் தன்இனத்தின் இயல்பினை. இடுக்கண் வருங்கால்சிரிப்பார். இன்னலைக்கன்னல் என்று ஏற்பர் கொள்கைக்காக. தமிழர் தயங்கார், மயங்கார், பணியார். கொடுமைபலபுரிய ஒரு கும்பல் துணிந்தாலும், பகுத்தறிவாளர் பின்வாங்கினதில்லை. அதனாலேயே பாரிலே அறிவு ஆட்சிசெய்யமுடிந்தது. அறிவுக்கும் ஆண்மைக்கும் உயரிடம்தரும் இனம், தமிழர். அதனை அறிந்துதான், இவ்வளவு இடர் விளைவிப்பர், என்றாலும், பார்ப்பனியத்தை ஒழித்தாகவேண்டும், என்று தைரியத்துடன், நம்பிக்கையுடன் நண்பர் இராமநாதன் இதனைக்கூறினார். இருக்கும் சச்சரவுகள் போதாதென்று, இப்போது ஓர்புதிய சண்டையைக் கிளப்பிவிடுகிறார்?

இந்து—முஸ்லீம் சண்டைஇருக்கிறது, இதுபோதாதாதொல்லை, புதியதொல்லை வேண்டுமோ?

ஆதித்திராவிடரின் விடுதலைக்காகப் போராடுவதைவிட்டு, இந்த அம்பேத்கார் ஏன் வேறு சண்டையைமூட்டிவிடுகிறார்?

திராவிடநாட்டுப் பிரச்னையைப்பற்றி வடநாட்டிலிருந்துவந்த ஒருவர் பேசுவானேன்?—என்றுகேட்கும் மேதாவிகட்கு நண்பர் சரியானபதிலளித்திருக்கிறார். நாட்டிலேஉள்ள நானாவிதநோய்களுக்கும் மூலநோய்பார்ப்பனியமே என்பதை எடுத்துக்காட்டியிருக்கிறார்.

"பார்ப்பனியமே, இந்நாட்டிலுள்ள பலபிரச்னைகளுக்கும் அடிப்படையாக இருக்கிறது. பார்ப்பனியமே இந்து-முஸ்லிம் பூசலைஉண்டாக்கிற்று. தீண்டாமையும் ஜாதிக்கொடுமையும் அதன்விளைவுகளே. திராவிட நாட்டுப் பிரிவினைக் கிளர்ச்சிக்குப் பார்ப்பனியமே காரணம்" என்று அன்பர் இராமநாதன் அடுக்கடுக்காகக்கூறிவிட்டார். டாக்டர் அம்பேத்கார் எந்த ஆதித்திராவிட மக்களின் விடுதலைக்காகப் போராடுகிறாரோ, அந்தமக்களின் அடிமைத்தனத்துக்குக் காரணம் பார்ப்பனியம், அந்தப் பார்ப்பனியத்துக்கு ஆதாரம் வேதபுராண இதிகாசங்கள். எனவே, ஆதித்திராவிடரின் தளைகளை உடைத்தெறியவேண்டுமானால்வேத புராணப் புரட்டுகளை ஒழித்தாகவேண்டியகடமை டாக்டர் அமபேத்காருக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதைக்கூறியதோடு, இங்கு எப்படி ஆரியர் உயர்ஜாதி என்ற இறுமாப்பான கோட்பாட்டினைக் கொண்டுள்ளனரோ, அதுபோலவேஜெர்மானியர் ஐரோப்பாவிலே பார்பனர்களாக முயற்சிக்கின்றனர், அதனை நேசநாட்டுப் படைகள் முறியடிக்கின்றன. அதுபோலவே இங்கு பார்ப்பனிய பாசிசத்தை அழித்தொழிக்க அஞ்சாநெஞ்சன் டாக்டர் அம்பேத்கார் முன்வந்த ஆண்மையை நான் பாராட்டுகிறேன், என்றும் இராமநாதன் கூறியுள்ளார். நேர்மையுடன் அவர் கூறியுள்ளவற்றைஏற்க ஆரியம் மறுக்கும் என்பது உறுதி. அணைத்தால் ஆரியம் அடங்காது! அடிவருடினால் அன்புகாட்டாது!! உன் பிடியிலே இனிஇரேன் என்றஉறுதியைத் தெரிவித்துவிட்டால் மட்டுமே ஆரியம் அடங்கும். ஆண்மையாளர்காள்! இதனை அறிக! ஒன்றுசேருக! வெல்க!!

# சொல்லாதது.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கனகன் வேலைக்கு அமர்ந்திருந்தகடையின் முதலாளி, கொடுமைக்காரன். அவன்தந்த இடிபொறுக்கமாட்டாமல், கனகன், தாய்நாடுசென்று அனைக்காவடியாகவாவது வாழலாம் என்று அக்கரையைவிட்டு இக்கரைவந்தான். சுந்தரி இருப்பதை, அவனுக்கு யாரோசொல்லியல்ல அவன் ஆற்றூருக்குவந்தது. ஆற்றூருலே அருமைநாயகம் என்பவர், ஆலை வைத்திருக்கிறார், அங்கு சென்றால்வேலை கிடைக்கும் என்ற செய்திதெரிந்து, வேலைக்காக அவர்வீடுவந்தான்.

கனகனுடைய வரலாற்றினைக்கேட்டார் அருமைநாயகம்.

"நீதானா அந்த ஆசாமி. அடமடையனே, உன்னாலே நிராகரிக்கப்பட்ட. பெண்ணிடம்போய் மன்னிப்புக்கேட்டுக்கொள், என்று அவர்சொல்லவில்லை.

"உட்கார் தம்பி! உட்கார்! உன்னைக் காணப் பல நாட்களாகக் காத்துக் கொண்டிருந்தேன். இலுப்பப்பட்டிமிராசுதாரின் மருமகன் கனகு நீதானா? சரி, சரி! உட்கார்" என்று கூறினார் அருமைநாயகம், ஆச்சரியத்தால் திகைத்துப் போனான் கனகன்.

"தங்கம்! ராஜா! டே, தம்பி,தங்காராஜ்! என்று அழைத்தார், "தாத்தா, இதோ வந்தேன்" என்றுகூவிக்கொண்டே ஓடிவந்தான் பையன்.

"உன் அப்பா வந்திருக்கிறார்"என்றார், கனகன் மிரண்டான், பையனின் கண்கள் அகன்றன, வாய்திறந்தபடி நின்றான், முகத்திலே ஓர் விவரிக்கமுடியாத உணர்ச்சிக்குறி!

அடுத்த விநாடிஅப்பா!என்றான்,பாய்ந்தோடி கனகுவின் கழுத்தைக்கட்டிக் கொண்டான், கனகனுக்கு ஒன்றும் புரியவில்லை.

"ஐயா! இது என்ன? வேலை தேடிக் கொண்டு இங்கே நான் வந்தேன். இது யார் இந்தச் சிறுவன், என் மகன் என்று கூறுகிறீரே. அவனும் அப்பா ,என்று அழைக்கிறானே, இதென்ன விந்தை" என்று கனகன் கேட்கவில்லை. அவனுடைய கண்களின் மிரட்சியைக்கண்டு, அருமைநாயகம் சிரித்தபோது, கனகன் இப்படிக்கேட்க எண்ணுகிறான்என்பதை அவர் தெரிந்தேதான் சிரித்தார் என்பது தெரிந்தது.

அடுத்த விநாடி துள்ளி ஓடினான் தங்கம்,

அம்மா, அம்மா, அப்பா, அப்பா, அப்பா, வந்துவிட்டார். ஓடிவா, சீக்கிரம் வா,—என்று கூவினான், ஓடினான் வீட்டுக்குள் தாயைக் தேடிக் கொண்டு.

"அப்பா, அப்பா, அப்பா, வந்துவிட்டார்," ஆம், ஆம். அவனுடைய செவிகளுக்கு அந்த மொழி எவ்வளவுதான் இன்பம் தந்தது, பலநாட்கள் மெல்லிய குரலிலே, யாருக்கும் தெரியாதபடி, அவனைக் கூறிக்கொள்வான், அப்பா, அப்பா, இல்லை, அப்பா இங்கேஇல்லை, அப்பா வரவில்லை, அப்பா,இன்னமும் வரவில்லை, என்று.அப்பாவந்துவிட்டார் என்றுகூவினான் .மான்போலத் துள்ளிக்குதித்தான். தங்கராஜனின் ஆர்ப்பாட்டத்தைக்கண்டசுந்தரிக்குப்பயமாகிவிட்டது,அவனுக்குப்பித்தம்பிடித்துவிட்டதோஎன்று. தாயைக்கண்டஉடனே, கையைப்பிடித்துஇழுத்துக் கொண்டு ஒடினான் தங்கராஜன், கனகன் இருந்த அறைக்குள். வாசற்படியருகே சென்றாள். உள்ளே இருந்த கனகன் "சுந்தரீ" என்று கூவினான், இருவரிலே யார் முதலிலே பாய்ந்தது என்றுதெரிய முடியாதபடி, ஒரு ஆனந்த அணைப்பு ஏற்பட்டது. ஒழு வயோதிகரும் ஒரு சிறுவனும் அங்கே இருந்ததை அவர்கள் அறிந்துகொள்ளவில்லை. இருவர் விழிகளிலும் நீர் குபு குபுவெனக்கிளம்பி வழிந்தது.

"சுந்தரி! சுந்தரி! கண்ணே சுந்தரி," என்று கதறினான் கனகு. முகத்தைத் தன் இருகரங்களிலும் பிடித்துக்கொண்டு உற்றுப்பார்த்தான். அவள் கன்னத்திலே புரண்டோடிய கண்ணீரைத்துடைத்தான், மீண்டும் அணைத்துக்கொள்ளச் சென்றான்; கழுத்திலே தாலிஇருக்கக் கண்டான்—பயந்தான். சுந்தரியின்முகத்திலே ஒருகுறுநகை பிறந்தது.

"தங்கம், சின்னத்தாத்தாவை அழைத்துவா" என்று கூறினான், சிறுவன் ஓடினான், அவனைப் பின்தொடர்ந்துசென்றார் அருமைநாயகம், "அரைமணிநேரம் யாரும் அந்த அறைப்பக்கம் போகக் கூடாது" என்று உத்தரவிட்டார். சுந்தரி தன் சரிதத்தைக்கூறி முடித்தாள் கனகனிடம். கனகன்தன்கதையைக்கூறினான், அவள் கட்டியிருந்ததாலியை முத்தமிட்டான்.

"அக்கரைக்குச்சென்றிருந்த சுந்தரிபுருஷன் வந்துவிட்டார்" என்று ஆற்றூர் வாசிகள்பேசிக்கொண்டனர். அவர்களுக்கு,சுந்தரியின் சோகக்கதையின் சூட்சமப்பகுதியையாரும் சொல்லவில்லை,, தாய்கட்டியதாலி, அக்கரைக்குப்போன அவள்புருஷன் வந்துவிட்டான். இனி இக்கரையிலேயேதான் இருப்பானும்- என்று ஊரார்சொல்லிக்கொண்டார்கள். அவன் கட்டாததாலி அவள் கழுத்திலே இருந்ததுயாருக்குத்தெரியும், அவனுடைய அந்தநாள் நடவடிக்கையை யார் அவர்களுக்குச்சொன்னார்கள்.

சுந்தரி:—"தங்கம். உங்கஅப்பாவை ரொம்பநல்லவரென்று எண்ணாதே. ஜாக்ரதை. ரொம்பரொம்பக்கெட்டவர். அவர் என்னசெய்தார்தெரியுமா? சொல்லிட்டுமா?"

கனகன்:-"சுந்தரி, சுந்தரி, சொல்லாதே சுந்தரி உனக்குக் கோடிபுண்ணியம், அதைமட்டும்சொல்லாதே"

தங்கம்:-"அம்மா, அம்மா, சொல்லம்மா, சொல்லு. அப்பா, அம்மாவாயை மூடிடாதே. அம்மா, சொல்லு.

சுந்தரி:-"உங்கஅப்பார் என்ன செய்தாருதெரியுமா? ஒருநாள்,.........."

கனகு:-"ஆ, அப்பா அடிவயிற்றிலே வலிக்குதே, அப்பப்பா, பொறுக்கமுடியல்லையே தம்பி, ஓடிப்போய்கொஞ்சம் தண்ணீர் எடுத்துவா.

(பையன் ஓடினதும், கனகம், சுந்தரியைக் கட்டித்தழுவிக்கொண்டு)

சுந்தரி, கண்ணில்லே, சொல்லாதம்மா, தயவுசெய்து சொல்லாதேகண்ணு,

சுந்தரி:-இப்படித் தளுக்குசெய்துவிட்டுத்தானே என்னைத் தவிக்கவைத்துவிட்டுப்போயிட்டிங்கமுன்னே,

கனகன்:-அதற்காகத்தான் தீவாந்திரசிட்சையை அனுபவித்தாகிவிட்டதே,

சுந்தரி:-ஐயோ! பாவம்! என்னாலே உங்களுக்கு இத்தனை கஷ்டம்.

(அறைக்குவெளியே சிறுவன்)

தங்கம்:-அப்பா! இதோ தண்ணீர்.

(அறைக்குள்ளே சுந்தரி)

சுந்தரி:-விடுங்கள், பையன் வந்துவிடுவான்.

(உள்ளே நுழைந்த சிறுவன்)

தங்கம்:-அப்பா வலிபோயிடுத்தா?

சுந்தரி:-ஓ! கிலியும்போயிடுத்து.

தங்கம்:-நீ, என்ன புலியா, எங்க அப்பா கிலிஅடைய. அதுசரி, அம்மா! சொல்றேன் சொல்றேனுன்னு சும்மா இருக்கறயே, சொல்லம்மா!

இந்த ரசமானநாடகம் அடிக்கடி நடந்தது, ஆனால் சுந்தரி ஒருநாளாவது, தங்கராஜனுக்குக் காவேரியிலே ஸ்நானம் செய்த கனகனின் கதையைமட்டும் சொல்லவேயில்லை, எப்படிச்சொல்லமுடியும்!!

## அறிவிப்பு.

தோழர்கள் அனுப்பிய நிகழ்ச்சிக் குறிப்புகளை இவ்வாரம் வெளியிட முடியவில்லை, அவை அடுத்த இதழில் வெளிவரும்.

# பம்ப இராமாயணம்

11-ம் பக்கத்தொடர்ச்சி.

"தசரதா! நான் எப்படிச்சொல்வேன் எனக்கு நெஞ்சு அடைக்குதே!"

"சொல்லுங்கள் ஸ்வாமி! என் மனம் குழம்பிவிட்டது."

மன்னா! உன்னைக் கொல்ல........."

"எவன் ஸ்வாமி கிளம்புகிறான், இந்திரனா, சந்திரனா? யார், கூறுங்கள்."

"அவர்களல்லவே! அவர்கள் யாராவது கிளம்பினால் நானே தடுத்திருப்பேனே, இலங்காதிபதியின் தம்பி, வீர விபீஷணன் வருகிறான், உன்னைக்கொல்ல. உனக்கு ஒருமகன் பிறந்து, இராவணனைக் கொல்வான் என்று ஜோதிடன் கூறினானும். அண்ணனைக் காப்பாற்ற விபீஷணன், உன்னைக்கொல்ல வருகிறான்."

பம்ப இராமாயணத்தை நாடகமாக நடத்தப் பகுத்தறிவு நாடக சபையொன்று கிளம்பினால், தசரதருக்கும் நாரதருக்கும், இதுபோல உரையாடல் நடந்தாகக்காட்சி இருக்கும், ஏனெனில், நாரதர், தசரதனுக்கும் ஜனகனுக்கும், விபீஷணனின் சபதத்தைக் கூறிவிடுகிறார், கூறியதோடு, தப்பித்துக்கொள்ள உபாயமும் சொல்லித்தருகிறார். அதன்படி, தசரதனும் ஜனகனும், தத்தம் அரண்மனையிலே, தத்ரூபமான பிரதிமைகளை அமைத்துவிட்டுத், மாறுவேட மணிந்து கொண்டு தேசாந்திரம் போய்விடுகின்றனர். விபீஷணன் பிரதிமைகளை அழித்துவிட்டுத், தசரதனும் ஜனகனும்இறந்துவிட்டதாக எண்ணிக்கொண்டு இலங்கை போய்ச்சேருகிறான் என்பது பம்ப இராமாயணம்.

தசரதன் மாறுவேடமணிந்து நாடு பல சுற்றும்போது, கண்டக மங்கலபுரம் என்ற இடத்திலே, கைகேயியின் சுயம்வரம் நடைபெற, அங்கு சென்று, அவள் மனதைக்கொள்ளை கொண்டான். மாலை வீசினாள் மங்கை, வாளை வீசினர் சுயம்வரத்திற்கு வந்திருந்த வேந்தர்கள். கலியாணமண்டபம் களமாயிற்று, மாப்பிள்ளை மாவீரனானான்: மனையாள் சாரதியானாள், வெற்றி தசரதனுக்குக் கிடைத்தது, வேல்விழியாளின் வீரத்தாலேயே வெற்றிபெற்றதால், தசரதன், மனம்பூரித்துக்கைகேயிக்கு வரம்தர, வனிதை வேண்டும்போது பெற்றுக்கொள்கிறேன் என்ற நிபந்தனையுடன், வரத்தை ஏற்றுக்கொண்டு, ',வதுவை''யை முடித்துக் கொள்கிறாள். தசரதன்; கைகேயியுடன் அயோத்திதிரும்பி அரசோச்சுகிறான். வேறுபல அழகிகளையும் மணம் செய்து கொள்கிறான், இராம, இலட்சுமண, பரத, சத்ருக்னர்கள் பிறக்கின்றனர்.

நாடோடியாகச் சென்ற ஜனகனும், சிலகாலம் சென்று மிதிலையை அடைந்து அங்கு விதேகி என்னும் பாவையை மணம்புரிந்துகொள்கிறான். ஜனகனுக்குச் சீதை எனும் பெண்ணும், பிரபாமண்டலன் எனும் மகனும் பிறக்கின்றனர், இரட்டைக் குழந்தைகளாக. மிதிலையிலே ஜானகியும், உடன்பிறந்த பிரபாமண்டலனும், தொட்டிலிலே இருக்கட்டும், வேறோர் மண்டலத்துக்கு வாரீர்.!

இரதநூபுரசக்கரவாளபுரம், என்றோர் மண்டலம், அம்மண்டலாதிபதிக்குக் குழந்தைப்பேறு இல்லை. பட்டடனுக்கு மட்டுமே வாரிசு ஆகவேண்டிய நிலையிலே உள்ளவருங்கூடப் புத்திரனில்லாச்சோகத்தால் பீடிக்கப்படுகிறார்களே, நீண்ட பெயருடைய மண்டலத்தின் அதிபனுக்குக் குழந்தை இல்லை என்றால், சோகம் இராமற்போகுமா? மன்னனின் மனம், உலைக்கூடமாகிவிட்டது. விசாரத்தைப்போக்க நினைத்தான் வித்யாதரன் ஒருவருன். வித்யாதரர், இறக்கையில்லா விமானங்கள்! பறந்து செல்வர்! வித்யாதரன் ஒருநாள் மிதிலைக்குச் சென்றான் ஆகாய மார்க்கமாக!!

இதற்கிடையிலே தொட்டில் குழந்தைகள், வளர்ந்து, நடமாடும் நட்சத்திரங்களாகி (நடிக்கும் நட்சத்திரங்களல்ல) மிதிலையிலே நந்தவனத்திலே விளையாடிக் கொண்டிருந்தன. வித்யாதரன், பிரபாமண்டலனைத்தூக்கிக்கொண்டான், ககன மார்க்கமாகச் சென்றான், குழந்தையை இரதநூபுரத்தில் சேர்த்தான், வந்தவேலை முடிந்ததெனச் சொந்தஇடம் சென்றான். சோகித்திருந்த மன்னன் ஆனந்தக்கூத்தாடினான், அட என் கண்ணே, மணியே, கற்கண்டே, என்றுகுழந்தையைக் கொஞ்சினான். பிரபாமண்டலன் இரதநூபுர இளவரசனானான். மிதிலை மன்னனின் மகன் போரிடாமலே ஒரு இராஜ்யத்தைப்பெற்றான். பெற்றமகனை இழந்தோமே என்ற பெருங்கவலையிலே மூழ்கினான் ஜனகன். கவலையில் மூழ்கின நேரத்திலே கிராதகர்கள் என்ற கூட்டம் போர் முரசுகொட்டிய சத்தம் கேட்டான், சித்தம் குழம்பினான், படைஎடுத்து வந்தவரோடு போரிடக் கிளம்பினான். போரிலே துணைவேண்டித் தசரதனுக்குத் தூதனுப்பினான், இராமனும் இலட்சுமணனும் மிதிலைக்கு வந்திருந்து கிராதகர்களைவென்று ஜனகனுக்கு உதவி செய்தனர்.

சீதை சிறுமியாக இருந்த காலம் போய், சிங்காரியான காலமது. சிங்கமெனப்போரிட்ட இராமனுக்குச் சீதை மீது...........வேறென்ன உண்டாகும் காதல், போரிலே இவனேபுலி, பூங்கொடிக்கேற்றவனே என்று ஜனகன் தீர்மானித்தான். சீதையை இராமனுக்கு மணமுடிக்க இசைந்தான். ஜெயமங்களம் பாடிவிடாதீர்கள், கதை வளருகிறது, நாரதர் வருகிறார்.

பிரபாமண்டலன், இரதநூபுரத்திலே தோட்டத்திலே உலவிக்கொண்டு, வழக்கமாகக் கண்டமலர்களைக்கண்டு, சலித்திருக்கும் நேரம், ஒரு சித்திரம் தீட்டப்பட்ட பொருளைக் காண்கிறான். மலர் அல்ல, மலர் முகவதி, பிறகு என்னநடக்கும், தெரிந்ததுதானே. நான்விரும்பும் பகுத்தறிவு நாடகக் கழகம், இக்காட்சியிலே பிரபாமண்டலனை என்ன பேச வைக்கும்!

"காவியத்திலும் காணக்கிடைக்காத கட்டழகி! நீ ஓவியந்தானா, உண்மையா? சித்திரமே! சிந்தனையைச் சுழலச்செய்யும் யந்திரமே! நீ யார்? எந்நாட்டு நங்கை? எவன்குமாரி? என்று பிரபாமண்டலன் காதல்மொழிபேசிகானம்பாடிக், களிநடனமாடி, "இவளையன்றி வேறொருவளை மணம்புரியேன். இவள் எனக்கு இல்லையேல் நான்பிணமாவேன், காதல், காதல், காதலின்றேல் சாதல்" என்று பேசுவான்!

பிரபாமண்டலன் சித்திரத்தைக்கண்டு காதல்கொண்ட செய்திகேட்டான் மன்னன். "என்மகனின்மனதைக்கவர்ந்தமங்கைஎங்கிருப்பினும்எனக்கேமருமகளாகக் கடவள்" என்று தீர்மானித்தான். அவனும் அறியான், மகனுக்கும் தெரியாது, சித்திரத்தைத்தீட்டிச்சிங்காரத்தோட்டத்திலே வீசிவிட்டு, ஆசையைக்கிளறி விட்டவர், நாரதர் என்பதனை! அதுமட்டுமா? நீங்கள் அறிவீர்களா, பிரபாமண்டலன் உள்ளத்திலே காதலை அமோமாகக் கிளறிவிட்ட அந்தச்சித்திரம், எந்தச் சிற்றிடையாளுடைய உருவம் என்பதை, சித்திரம் சீதையின் உருவம், தங்கையினிடமே அண்ணன் காதல் கொண்டான், சீதையின் உருவமே உள்ளத்திலே ஊன்றிவிட்டதால், காதல்பித்தம் கொண்டு விட்டான் பிரபாமண்டலன். அவன் அறியான் சீதை தன் உடன் பிறந்தவள் என்பதனை. தொட்டிலிலே இருவரும் குழந்தைகளாக ஒன்றாகத்துயின்ற சேதிதெரிந்திருந்தால், பிரபாமண்டலன் சீதையைப் படுக்கையறையிலே பிரியையாக்கிக் கொள்ளச் சம்மதியான். தங்கப்பதுமை போன்றவள்என்பது தெரிந்தது, தங்கை என்பதை அறியவில்லை. காதலுக்குத் தான் கண் கிடையாதாமே,

"ஜனக மகாராஜரே,வாரும், வாரும்."

"வேந்தரே, இவ்வளவு அவசரமாக எம்மை வரவழைத்த காரணம் யாதோ?'

"காரணம் உண்டு, சொன்னால் நீர் களிப்படைவீர்."

"பரம சந்தோஷம். விஷயம் என்ன?'

"ஜனகமகாராஜரே, என் அரண்மனைக்கு ஒரு தீபம் வேண்டும்."

(10-ம் பக்கம் பார்க்க)

# பம்ப இராமாயணம்

9-ம் பக்கத்தொடர்ச்சி.

தீபமா?"

"ஆமாம், ஒரு திருவிளக்குத்தேவை"
"விசித்திரமாக இருக்கிறது. விளக்கு என்றால் விளங்கவில்லையே."

"விளங்க வைக்கிறேன். குடும்ப விளக்கு எது?"

"குலஸ்திரி, பத்னி."

"விவேகி நீர், பத்னிதான், ஆம், அரண்மனைக்கு, அழகு தீபம் வேண்டும். பிரபாமண்டலனுக்கு மனைவியாக வரும் பாக்யசாலிதானே, என் அரண்மனைக்குத் திருவிளக்கு"

"ஆம், அரசே, உண்மைதான்."

"மிதிலையின் மணியென விளங்கும் சீதையை, என் அரண்மனைக்குத் திருவிளக்காகத்தருமாறு..............."

"மன்னா, என்ன செய்வேன், சீதையை.................................."

"எப்படிப்பிரிந்து வாழமுடியும் என்று கவலைப்படாதீர். அங்கு ஆறுமாதம் இங்கு ஆறு மாதமாக இருக்கலாம் சீதை."

"அல்ல! அல்ல! நான்சொல்ல வந்தது அதுவல்ல."

"சீதையைத், திருமணம்செய்துகொள்ளும் நோக்கம் பிரபாமண்டலனுக்குஉண்டோ இல்லையோ என்று யோசிக்கிறீரா.? மகன் சம்மதித்தபிறகே நான் உம்மை அழைத்தேன்."

"மன்னா, மன்னிக்கவேண்டும், சீதையைநான் வேறொருவருக்குத் தருவதாக வாக்களித்து விட்டேன்."

"வாக்களித்தீர், என் நோக்கம்அறியா முன்பு, இப்போது வாக்கை, எனக்கு அளியும். போக்கை மாற்றிக்கொள்ளத் தெரியாதார் புவியாளும் முறை அறியாதாரே என்பதைத்தாம் தெரியாதவரல்லவே.'

"சீதையை, இராமனுக்குத்தர ஏற்பாடாகி விட்டது."

எத்தனையோ ஏற்பாடுகளிலே மாறுபாடுகள் சேரிடுகின்றன!"

"இராமன், எனக்குப் பேராபத்து நேரிட்டபோது உதவிசெய்தான்."

"சீதையைப் பரிசாகப் பெறவா? ஜனகா! மன்னர்கள் தங்கள் மகளைப் பலி சம்பிபானாகக்கருதுவதில்லை, வழக்கமுமல்ல."

"சீதையைஅவன் காணுமுன்பே களம் புகுந்தான் எனக்காக."

சீதையைக் காணுமுன்பே, பிரபாமண்டலன், காதற்கனலிலேபுகுந்துவிட்டான்.

குற்றம்........."

பருவத்தின் பாற்பட்டது. பலபேசல் பயனில்லை, மன்னா! உமதுமகளை என் மகனுக்குத்தர இசைவீரா இல்லையா? என் பந்தத்துவம் வேண்டுமா, பகை வேண்டுமா?"

"ஒருபுறம் கருநாகம், மற்றோர்புறம் படுகுழி, என்றால் என் செய்வது......"

"புத்தியுள்ளவன் கருநாகத்தைப்படுகுழியிலே தள்ளுவான்"

"அரசே, என்னால் சொன்ன சொல்லை மாற்ற முடியாது, காரணமின்றி."

பிரபாமண்டலனின் பிரேமை என் கோபத்தைப் பெட்டிப்பாம்பாக்கி விட்டது. சரி, ஜனகரே, நீர் வியந்துகூறும் அந்தவீரன், எம்மிடம் இருக்கும் ஒரு வித்யாதர வில்லை உடைத்துவிடுகிறானா என்றோர் பரீட்சை ஏற்படுத்துவோம். வில்லை முறித்தால் சீதை இராமனுக்கு."

"வேந்தரின் விருப்பப்படி"

இந்தக்காட்சியும் நடந்த பிறகு, வில் முறிக்கும் காட்சி நடந்து, சீதையை இராமன் திருமணம் செய்துகொள்ளும் காட்சி நடக்கும், நாடகம் நடத்தினால். பம்பன் இப்போக்கிலேதான் கதைதீட்டியிருக்கிறான்.

சீதையும் இராமனும் சதிபதியாகி அயோத்தி சென்று அகமகிழ்ந்திருக்கும் சமயத்திலே, இராமனுக்கு முடி சூட்டத் தசரதன் தீர்மானிக்க, கைகேயி தன் மகன் பரதனுக்கு நாடும் இராமனுக்குக் காடும் என்று வரம் கேட்டுப்பெற, இராமன், இலட்சுமணன் சீதை ஆகியோருடன் ஆரண்ய வாசம் செய்கிறான். பாதாள இலங்கையிலே, இராவணனின் தங்கை சுந்தரவதிக்கு மகன் சம்புகன் என்று கூறினோமே, அவன் மாயவாள் ஒன்றைப் பெறுவதற்காகக் கடுந்தவமிருக்கிறான் பனிரண்டு ஆண்டுகளாக. ஆரண்யம் சென்ற இலட்சுமணன், சம்புகனைக் கொன்றுவிட்டு மாயவாளை அபகரித்துக் கொள்கிறான்.

மகனைக் கொன்றவனுடன்போரிடுகிறான் தந்தைகரன். அவனுக்கு உதவியாக வருகிறான் இராவணன். அப்போது சீதையைக்காண்கிறான், மோகவயத்தனாகிறான். வனதேவதையின்யோசனையின்படி, சங்குஊதி, இராமனைச் சீதையை விட்டுப்பிரியச்செய்து, சீதையைச்சிறைப்படுத்திஇலங்கைக்குஎடுத்துச்செல்கிறான். பிறகுஇராம இராவணயுத்தம் நடக்கிறது. அதுபோது, சீதைதன் உடன்பிறந்தவள் என்றசெய்திதெரிந்து பிரபாமண்டலன் இராமனுக்குத் துணைநிற்கிறான். சுக்கிரீவன் அனுமான் எனும் வேந்தர்களும் துணைநிற்கின்றனர். இராவணன் கொல்லப்பட்டுச், சீதைசிறை மீட்கப்படுகிறாள். இராமன் பிறகு அயோத்திதிரும்பி, முடிசூட்டிக்கொள்கிறான் என்றவிதமாகமுடிகிறது பம்ப இராமாயணம். விபீஷணனை முதலிலே வீரனாகச் சித்தரித்துக் காட்டுகிறார் பம்பன். நடந்ததொல்லைகளில் நடுவேநாரதரைக்கொண்டுவந்து நிறுத்துகிறார். பம்ப இராமாயணத்தின் போக்கின்படி பார்த்தால், இராமஇராவணர்விஷயம், பல விதத்திலே இன்று பாராயணம்செய்யப்படும் கம்பஇராமாயணத்துக்குமாறாக இருப்பதை அறியலாம். இன்னமும் வேறுவேறுவிதமாக இராமாயணங்கள் உண்டு. இப்படிப் பலரால் பலவிதமாகப் புனைந்துரைக்கப்பட்ட ஒரு கதையைத்தான் நற்கதிக்கு ஏடுஎன்றும், நடுவீட்டுப் பூஜைக்கு உகந்ததென்றும், நமதுபுண்ய சரிதமென்றும் கூறுகிறார்கள். ஆராய்ச்சி உலகம், அறிந்தும் அறியாதாராக இருப்பவரைக் கண்டு எள்ளி நகையாடாதிருக்குமா, என்பதைப் பம்ப இராமாயணச் சுருக்கத்தைப் படித்துச்சிந்தித்துப் பிறகு கூறுமின்.

தந்தி:—"புறமார்க்" திருச்சி.



## பம்ப இராமாயணம்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி.)

களித்தான், டிக்கட் பரிசோதகர்திகைத்தார்!

"என், சார்! உங்களூல் இப்படித்தான் இருக்கோ?"

"என்னவிஷயம்? ரூல்கில் பேசறே, மரியாதையா எழுந்திரு"

"மரியாதையா நீயும் நடக்கவேணும். தெரியுமோ. டிக்கட் வாங்கவில்லை என்ருல் என்னசெய்யவேண்டும்' நீ? கேஸ் போடு. அவ்வளவுதானே ரூல். சட்டம் அதுதானே சார்! அதைவிட்டுவிட்டுக் கழுத்திலே கைபோடறயே. என்னைப் போன்றபடிச்சபேர்வழி யிடமே இவ்வளவு ஆட்டம் ஆடறயே, பட்டிக்காட்டானிடம், எவ்வளவு செய்வே"

"சிலபேர் இப்படித்தான் வாய்செத்தப்பூச்சிகளண்டே கைவரிசை காட்டறது". இதுபருவதத்தின் பேச்சு, மனம் மாறினதால்.

"என்ன இருந்தாலும் கழுத்திலே கை வைக்கப்படாது பாருங்கோ. மனுஷாளுக்குக் கோபம் வருமென்னே." இது கனபாடிகளின் பாஷ்யம்.

"ஏதோ விஷக்கடிவேளை. டிக்கட் ஆபீசரும் அப்படிஒன்றும்தப்புத்தண்டா பேர்வழி இல்லை. இந்த மனுஷ்யரும் நல்லவர்தான்" இதுசமரசப்பிரியரின்பேச்சு.

"சார்! நானும் ஒரு ஆபீசர்தான்.ரயில்வே ஆபீசர்களின் சுபாவம் எப்படியிருக்கிறதென்று பார்க்கத்தான், டிக்கட்டில்லை என்று சொல்லிவைத்தேன். என்ன இருந்தாலும் பொறுமைஇருக்கவேணும். ஆத்திரம்கூடாது"

சதாசிவம் சாவதானமாக இதனைக் கூறிக்கொண்டே சட்டைப் பைக்குள் கையை நுழைத்தான்.

"நேக்குத் தெரியுமே பாட்டி, நான் அப்பவே சொன்னேனேல்லோ, அவர் டிக்கட் வைச்சிண்டே விளையாடுறார்னு. சொன்னது சரியாச்சிபார்த்தயேல்லோ" இது பர்வதத்திற்குப் பாவைகூறியது. இதற்கிடையிலே, சதாசிவத்தின் முகம் பயத்தால் சோபிதத்தை இழந்தது. கை கால் நடுக்கமெடுத்துவிட்டது, சட்டைப் பையிலே டிக்கட் இல்லை!

"கண்ணு! டிக்கட் காணேம்" என்று கலக்கத்தோடு கூறிக்கொண்டே சதாசிவம், உள்சட்டை மேல்சட்டையாவும் தேடித்தேடிப்பார்த்தான், டிக்கட்இல்லை. பரிசோதகர், சதாசிவத்தின் படபடப்பானபேச்சாலும், பக்கபலமாகப் பிரயாணம் செய்பவர்கள் கூறினதையும் கேட்டுக் கொஞ்சம் அடங்கியிருந்தாரல்லவா! சதாசிவத்தின் திகைப்பு, மங்கியிருந்த தீயைக்கிளறிவிட்டது. சதாசிவத்தை முறைத்துப்பார்த்தபடி, நின்ருன், சதாசிவம் பரிதாபத்துக்குரிய உருவமானுன்.

"சார்! டிக்கட்டைக் காணேம் சார், நிஜமாகநான் விளையாடினேன் இது வரையில். டிக்கட் வாங்கினேன், சட்டைப்பையிலே வைத்தேன், எங்கேயோ காணேம் சார்" என்று சதாசிவம் கூறினுன், துக்கம் அவனுடைய பேச்சின் இராகபாவத்தையே மாற்றிவிட்டது.

"மறைவாய்ப் புதைத்தஒடு மறைந்த மாயம்யாதோ, மாமுனிவரே அறியேன்" என்று பாகவதரின் பாடலைப் பாடிக் காட்டினுர் ஒரு சங்கீதப் பிரியர். ஒரு சந்தேகப்பிரியர் கேட்டார்சதாசிவத்தை "என்னய்யா வேடிக்கை. சட்டைப்பையிலே வைத்த டிக்சட், எங்கே போகும்" என்று.

"கால் முளைச்சுபோச்சு போலிருக்கு. கலியுகமேன்னே இது" என்று கூறிவிட்டுக் கனபாடி டிக்கட் பரிசோதகரைப் பார்த்துக்கண் சிமிட்டினுர்.

"ஐயா! மகாராஜ ராஜஸ்ரீ அவர்களே! உம்மடிக்கட்டைத்தயவுசெய்துகொடும்"- டிக்கட் பரிசோதகர், மரியாதையாக நடக்கவேண்டுமென்று சதாசிவம் கூறினதை மனதில்எண்ணிக்கேலியாக இது போல் கேட்டார்.

"சார்! சார்! நிஜமாச்சொல்றேன். டிக்கட்வாங்கினேன். தொலைந்துவிட்டது"

"டே! நீ பெரிய ஜாலக்காரன். முதலிலே, டிக்கட் இல்லைஎன்றுசொல்லி, பிறகு நான் கண்டிச்சுக்கேட்டதும், டிக்கட் இருக்குன்னுந்யாயம்பேசி, இப்போ, டிக்கட் தொலைஞ்சுபோச்சின்னு ஏமாற்றவா பார்க்கிறே"

இம்முறை டிக்கட் பரிசோதகரின்கை, சதாசிவத்தின் கழுத்திலே அதிகவேகமாகப்பாய்ந்தது.

"கண்ணு! சொல்லு. சொல்லப்பா' - சதாசிவத்தின் வேண்டுகோள்இது.

"எனக்கொன்றும்தெரியாதே!" இது கண்ணன், சதாசிவத்தின் பாடத்தின்படி சொன்னபதில்.

ஸ்டேஷன்! இரயில்நின்றது. சதாசிவம் டிக்கட் பரிசோதகரால் கீழே இறக்கப்பட்டார். கண்ணன் இறங்கித்தீரவேண்டி நேரிட்டது. சிறுகூட்டம் கூடிவிட்டது, பெருங்கூச்சல். வண்டிபுறப்பட்டுவிட்டது, வாலிபவிருந்தினுல் வகைகெட்ட செயல்புரிந்த சதாசிவம் இரயிலடியிலே ரகளையிலே சிக்கினுன். அவன் வாங்கியிருந்த டிக்கட், கைகுட்டையிலே சிக்கிக் காலடியிலே நெடுநேரம்இருந்து பிறகு கைப்பற்றுவாரில்லாததால், பெஞ்சிக்கு அடியிலேகிடந்தது!

சதாசிவன், டிக்கட்வைத்துக்கொண்டே, டிக்கட் வாங்காதவன்போல நடித்து வேடிக்கைசெய்யத்தொடங்கிக் கடைசியில், டிக்கட் வாங்கியிருந்தும் டிக்கட் வாங்காதவன் அனுபவிக்கவேண்டிய அவதியை அடையவேண்டிநேரிட்டது. காரணம், அவன் அறிந்தும் அறியாதவர் கூட்டத்திலே ஒருவன், டிக்கட்வைத்துக்கொண்டே வேடிக்கைசெய்கிறதாக அறிந்திருந்தான், ஆனுல் கைதவறி டிக்கட் கீழேவீழ்ந்துவிட்டதை அவன் அறியவில்லை. சதாசிவம், ஓடும் இரயிலில் மட்டுமல்ல, எங்கும் இருக்கிருன். ஒருவனல்ல! இந்நாட்டிலே பத்திலே எழு இந்தப் பேர்வழிதான். இவ்விதம் அறிந்தும் அறியாமலுமிருக்கும் அன்பர்கள்தான், இராமாயணம்போன்ற காவியங்களை ஆராய்ந்துரைப்பவர்மீது சீறுகின்றனர். அவர்களுக்குத்தெரிந்த இராமன் ஒருவன்! தேவன், அவதாரம், அரிஅம்சம்!! இராமனைப்பற்றி அவர்கள் அறிந்ததுதான் அறிவு, என்பது அவர்தம் எண்ணம். அவர்கள் அறியவேண்டும், இராமனைப் பற்றி, வேறுபலர் வேறுவேறு விதமாகவும் அறிந்திருக்கிருர்கள் என்பதை.பம்ப இராமாயணம் அவர்களுக்கு இந்த புத்தறிவைத்தரும்என்று நம்புகிறேன்.

*   *   *   *

வளர்ந்த பீடிகையும்முடிந்தது. இனிக் கேளுங்கள் கதையை. வால்மீகியும் கம்பனும், இராவணனை அரக்கனுகச் சித்தரித்து இராமனைத் தெய்வமாக்கி, அனுமானை அடியவனுக்கி, சீதையைச்சீதேவியாக்கி, விபீஷணனைஆழ்வாராக்கி, இராமாயணத்தைப் பாராயணப் புண்ய கதையாக்கிவைத்தனர். கோயிலிலே கொட்டுமுழக்கும், ஆரியத்துக்கு ஆதாரவும் அதன்பயனுக இன்றும் நடந்தபடி இருக்கக்காண்கிறேம். பம்ப இராமாயணம், அதுபோன்றதல்ல,! மண்டோதரி மணுளன் இராவணன் ஓர் மாவீரன்! மட்டற்ற மகிழ்ச்சியுடன் இலங்காதிபதியாகஇருக்கிருன். விபீஷணன், அவனுக்கு வாஞ்சனையுள்ள தம்பி. காட்டிக்கொடுத்துக்காசுத்தனிடம் கைக்கூலிபெறுபவனல்ல. பம்பன்முதலில்சித்தரித்தல் விபீஷணன், அண்ணனின உயிர்காத்திட அரும்பணிபுரியும் ஆண்மையாளன். இராவணனுக்கு ஒருசகோதரி. பெயர் சூர்ப்பனகைஅல்ல! சந்திரவகி! இராமஇலட்சுமணரிடம் மோகங்கொண்டு காட்டிலே காமவல்லியாகத்திரிந்து அங்கம் அறுபட்ட அணங்கல்ல. பாதாளஇலங்கை என்றஇடத்தின் அரசராம்கான், என்பானின் பட்டமகிஷி! சம்புகன், அவள்குமாரன்.

பம்ப இராமாயணத்திலே, இராவணனின் குடும்பம், ஒற்றுமையும் வாஞ்சனை

(12ம் பக்கம் பார்க்க)

# பம்ப இராமாயணம்.

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

யும், வீரமும் வளமும் செல்வமும்சீரும் சிறந்ததாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறதேயன்றி, கம்பசித்திரம்போல், கண்மண் தெரியாதுஆடிய அண்ணன், காமம்பிடித்தலைந்த தங்கை, காட்டிக்கொடுக்கும் தம்பி, என்ற முறையிலே இல்லை. இந்த மாறுபாட்டினை, மனமாச்சரியம் கொண்டு மதியைமறைக்கும்அன்பர்கள்மனதிலே பதியவைத்துக்கொள்ளவேண்டும். இராவணனை அரக்கனாகச்சித்தரித்து, அவ குடும்பத்திலேன்துரோகியும்தூர்த்தையும் உடன் பிறப்பாளர்களாக்கிக்காட்டியது, வால்மீகியின் கருத்தோடுகூடிய கற்பனை. ஆரிய ஏகாதிபத்யத்திற்கு ஆண்டவனின் ஆசியிருப்பதாக "விசுவாசிகளுக்கு"க் கூற வரைந்தது, அது. எனவே இலங்காதிபதியின் குடும்பக்காட்சி, அக்கருத்தினுக்கு ஏற்றவகையிலே சித்தரிக்கவேண்டியது வால்மீகியின் கடமையாகிவிட்டது. ஆரியநூலை ஆதாரமாகக்கொண்டு அரிதாசராகவேண்டிக் கம்பன் ஏடு எழுதியதால், ஆரியக்கவியின் அடிச்சுவட்டை அழகாக இங்கே பின்பற்றினான். தத்தமது கொள்கைகளை நிலைநாட்டவும் பிரச்சாரம்செய்யவும், ஏடுகளை எழுதுவர் என்பதை அறியாமல், கம்பன் கூறினான், கவர்ச்சிமிக்க கவிதைகளால், ஆகவே அக்கதை அவன்கூறியதுபோலத்தான் இருந்துதீரும், என்று நம்புவது பாமரரின்செயல். பண்டிதர்களோ, இத்தகைய பாமரரின் பண்ணைகளிலே மேய்ந்துதீர வேண்டியவர்களாகிவிட்டனர். பம்பன், ஆரியத்திற்காகக் கதை எழுதவேண்டிய அவசியமற்றவன். எனவே இராவணனைக் கேவலப்படுத்தவேண்டிய நிலையில்இல்லை. கம்பனின் ஏட்டிலே காதகனாகக் காட்டப்படும் இராவணன் பம்பனின் பாவிலே, வேறு உருவாக்கப்படுவதை உணரும் அறிவாளிகள், கதை கற்பனை என்பதையும், அக்கதையினைக், கையாண்டவர்கள் தத்தம் கருத்தினை வலியுறுத்த அக்கதையைக் கருவியாகக்கொண்டனர் என்பதனையும் அறிவர். அறிந்தோர், அத்தகைய கற்பனையை, நிறுத்து, உரைத்து, ஆராய்ந்து, தள்ளவேண்டுவனவற்றைத் தள்ளிக்கொள்ள வேண்டுவனவற்றைக் கொண்டு பயன்பெறுவர். இம்முறை தெரியாதவர், இராமநாமமே கற்கண்டு என்று கூறுவர், ஆராய்ச்சியாளர் மீது கற்குண்டுகளைவீசி மகிழ்வர்.

கம்பன், வால்மீகியை ஆதாரமாகக் கொண்டு இராமாயணம்எழுதினான். பம்பன், கிண்டலுக்கு அந்த இராமாயணத்தையே வேறுவிதமாக எழுதினான் போலும், பம்பன், பழங்காலத்துச் சு.ம. போலும், என்ற முடிவுக்கு, இதற்குள்ளாகவே சில, வேகவிவேகிகள் வந்துவிட்டிருப்பர். அவர்கள்உணர மற்றோர் விளக்கம் இதோ.

கம்பனுக்கு வால்மீகியின் ஏடு மூலம், அதுபோலப்பம்பனுக்கும் ஒரு மூலநூல் உண்டு. பம்பனின் கற்பனையல்ல. அவனும் கம்பன்போல் ஒரு மூலத்தைத்தழுவியே நூல் எழுதினான். ஆரியர்களுக்கு வால்மீகி எவ்வளவு சிரேஷ்டமானவரோ, [illegible] ஜைனர்களால் போற்றப்படும் ரவிசேனர்என்பவரின் இராமசரிதத்தை முதநூலாகக் கொண்டதுதான், பம்ப இராமாயணம். வால்மீகி, ஆரியத்தை வாழவைக்கவரைந்தார் இராமகாதை, அந்த நோக்கத்திற்கேற்ற விதத்தில். ரவிசேனர் என்ற ஜைனமேதை, [illegible] இன ஆதிக்கக்கருத்தேதுமின்றித் தீட்டினார் இராமகாதை, அதனைத் தழுவி எழுதினார், பம்பன். எனவே, இராவணனை இழிவு செய்யவில்லை, இரக்கம் என்றஒரு பொருளிலா அரக்கனாக்கவில்லை. இருபது திண்தோள்கொண்டு லட்சுமியின்மீது இச்சைகொண்டு, காமுகனாகக் கெட்டலைந்தவனாக்கவில்லை. இதுவரை, வால்மீகியாலும் கம்பனாலும் படம் பிடிக்கப்பட்ட இராவணனைக் கண்டறிந்தவர்கள், ரவிசேனர் காட்ட, பம்பன் தீட்ட வெளிப்படும், இலங்கை வேந்தனை இனிக்காணட்டும், கருத்துடன். இனி இலங்காதிபதியின் கொலுமண்டபம் செல்வோம்.

இலங்காதிபதி கொலு வீற்றிருக்கிறான். அங்கு கம்பன் காட்டியதுபோல, கனல்கக்கும் கண்ணுடையோரும், கோரப்பற்களுடையோரும், கொடியோரும் இல்லை. ஒரு வல்லமைமிக்க மன்னன் அவை இருக்கவேண்டிய முறைப்படியே காட்சி இருக்கிறது. பக்தியால் மிகுந்து பரிபக்குவத்தில் சிறந்து, பகவத்சேவை செய்யும் சிந்தையில் உயர்ந்து, அறநெறி அறிந்து, அண்ணனைத்தடுத்தாட்கொள்ளும் அண்ணலாகவும், சீதை எனும் பெருநெருப்பைக் கொண்டான் அண்ணன் இனி நில்லேன் அவன் முன்னம் என்று கூறிச் சரணாகதி அடைந்த ஆழ்வாராகவும், விபீஷணன் இல்லை. ஆற்றலுள்ள அரசனுக்கு விபீஷணன் அன்புள்ள தம்பியாகவே இருக்கிறான் மண்டோதரி கொலுவிலே, மந்திரிப்பிரதானியர் கொலுவிலே!! அந்தவேளையிலே, வந்து சேருகிறான் ஒரு ஜோதிடன்.

"இலங்காதிபதியே! உன் இராஜ்யத்துக்கும், உனக்கும் அயோத்திமன்னன் மகனாலும் மிதிலை மன்னன் மகளாலும், ஆபத்து வரப்போகிறது" என்று ஜோதிடன் கூறுகிறான்.

"எனக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய குமரன், குமரி, யாவர்,? பெயர் என்ன, எங்கு உளர்?" மன்னன் இதுபோலக் கேட்க, ஜோதிடன் கூறுகிறான், "அவர்கள் இனிப்பிறந்து வளர்ந்து பின்னரே உனக்குப்பேராபத்து விளைவிக்கப்போகிறார்கள்."

இலங்காதிபதி சிரித்திருப்பான், கொலுவிலே இருந்தோர் நகைத்திருப்பர். விபீஷணனே! "என் அண்ணனுக்கு ஆபத்தைத்தர, ஒரு அணங்கும், ஒரு [illegible], அயோத்தியிலும், மகள் மிதிலையிலுமா பிறக்கப்போகிறார்கள்? பிறந்தன்றோ பேராபத்து! பிறவாமலே செய்தால், ஏன்! எந்த அயோத்தி மன்னனுக்குக் காளை பிறந்துஎன் அண்ணனுக்குக் கேடுசெய்யப்போகிறான் என்று கூறுகிறாயோ, அந்த மன்னனையேகொன்றுவிடுகிறேன், மன்னன் மாண்டால், மகன் ஏது. இலங்கையின் மண்டலாதிபதிக்கு ஆபத்தேது. அதுபோலவே மிதிலையிலும் பிணம் வீழச்செய்வேன், என்று விபீஷணன் கூறினான். ஜோதிடன் வந்தபோது, அயோத்தி மன்னனுக்கும்மிதிலை அரசனுக்கும் குழந்தைகள் இல்லை, திருமணமே நடக்கவில்லை!!

இங்ஙனம் அண்ணனுக்கு உதவியாகத் தம்பி கிளம்பவே, நாரதர் நுழைகிறார் கதையில், எல்லாக்கதைகளிலும் வருவது போலவே!

"திரிலோக சஞ்சாரியே! அடியேனைக் காணவந்தது என்பாக்கியமே"

"என்னமோஅப்பா தசரதா! உன்னைக் கண்டு போகவேண்டுமென்று ஆவலோடு ஓடோடி வந்தேன். உன்னை மறுபடியும் நான்காணப்போகிறேனோ? எனக்குஅந்தப் பாக்கியம் இல்லை"

"ஸ்வாமி! மகரிஷியே! இது என்ன கர்ணகடூரமான வார்த்தை"

"ராஜன்! தசரதன் மாண்டான் என்று கேள்விப்படும்போது இதைவிடக் கர்ணகடூரமாகவன்றோ இருக்கும், அதை நினைத்தே நான்இப்போது ஆயாசப்படுகிறேன்"

"நாரதரே! என்ன வார்த்தை பேசுகிறீர்."

"மன்னா! உன்னை நான் கடைசிமுறையாகத்தான் காண்கிறேன்"

"ஏன்! தங்களுக்கு என்ன விபத்து நேரிடப்போகிறது? மீண்டும் அயோத்தி வரமாட்டீரா?"

"அயோத்திக்கு வருவேன், ஆனால் நீ இருக்கமாட்டாயே மன்னா!"

"என்ன! என்ன!"

(9-ம் பக்கம் பார்க்க)

Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press,
51-Chairman, Sambasiva Chettiar Street, L. Conjeeveram.